**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்**

முன்னிலை : **திரு. ப. சரவணன், பி.எல்.,**

கூடுதல் மாவட்ட நீதிபதி, திண்டுக்கல்

2022–ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 08–ஆம் நாள் புதன் கிழமை

**அசல் வழக்கு எண்.121/2019**

**CNR. No. TNDG01-002685-2019**

1. R. தினகரன் (இறப்பு)
2. சௌமியா
3. சபரிபிரியா

(இறந்த 1வது வாதியின் வாரிசுதாரர்களாக 2 மற்றும் 3 வாதிகள் இ.ம.எண்.2/2020, 29.10.2010 நாளிட்ட உத்தரவின்படி சேர்க்கப்பட்டு, இ.ம.எண்.4/2020, 08.02.2021 தேதியிட்ட உத்தரவின்படி திருத்தப்பட்டுள்ளது.)

…. வாதிகள்

/எதிர்/

N. மணிமாலா …. பிரதிவாதி

இவ்வழக்கானது 06.06.2022–ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன் விசாரணைக்கு வந்தபோது, வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு. வி.எஸ். காந்திமதிநாதன் மற்றும் திரு. வி. சதீஸ்குமார் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. பி. கணேசன் அவர்கள் ஏற்கனவே ஆஜராகிய நிலையில், வாதி தரப்பு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பலமுறை வாய்தா கொடுக்கப்பட்டும், பிரதிவாதி நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் தோன்றாத் தரப்பினராக்கப்பட்டும், வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டும், ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

தாவா தொகையான ரூ.25,61,999/−ஐயும், அசல் தொகை ரூ.20,00,000/−க்கு பிராது தேதி முதல் 12% பின்வட்டியும் மற்றும் செலவு தொகையும் சேர்த்து பிரதிவாதி, வாதிக்கு செலுத்த வேண்டுமென உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு.

2. **வாதி தாக்கல் செய்துள்ள திருத்தப்பட்ட வழக்குரையின் சுருக்கம் :−**

கடந்த 15.02.2017 அன்று பிரதிவாதி, சில்லரைக் கடன்களை தீர்ப்பதற்கும் மற்றும் தொழில் நிமித்தமாகவும் ரூ.20,00,000/−ஐ 1−ஆம் வாதியிடமிருந்து கடனாக பெற்றுக் கொண்டு, மேற்படி கடன் தொகையை 12% ஆண்டு வட்டியுடன் சேர்த்து திருப்பித் தருவதாக ஒப்புக்கொண்டு பிரதிவாதி, 1−ஆம் வாதியின் பெயருக்கு புரோநோட்டு எழுதிக் கொடுத்தார். புரோநோட்டு சம்பந்தமாக அசல் மற்றும் வட்டித் தொகையை பிரதிவாதி செலுத்தவில்லை. ஆகவே, பிரதிவாதிக்கு 1−ஆம் வாதி 15.06.2019 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார். அதை பிரதிவாதி பெற்றுக் கொண்டு பதில் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை. ஆகவே, இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு நிலுவையில் இருக்கும்போது, 1−ஆம் வாதி இறந்துவிட்டதால், அவரது வாரிசுதாரர்களாக 2 மற்றும் 3 வாதிகள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

3. **பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம் :−**

பிரதிவாதி, வாதியை பார்த்ததில்லை. வாதிக்கும், பிரதிவாதிக்கும் இடையே கொடுக்கல் வாங்கல் எதுவும் கிடையாது. ராஜலெட்சுமி என்பவரிடம் பிரதிவாதி ரூ.40,000/− பெற்றிருந்தார். அப்போது எழுதப்படாத புரோநோட்டு மற்றும் வெற்றுப் பத்திரங்களை பிரதிவாதி ஆதரவுக்காக கொடுத்து வைத்திருந்தார். ராஜலெட்சுமியிடம் ரூ.40,000/− செலுத்தி மேற்படி ஆவணங்களை திருப்பிக் கேட்டபோது, அதை திருப்பிச் செலுத்தாமல் காலதாமதம் செய்து வந்தார். மேற்படி ஆவணங்களை மோசடியாக

பெற்று, அதை நிரப்பி வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். ஆகவே, வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. வாதியின் வழக்குரை மற்றும் எதிர்வழக்குரையின் பேரில் கீழ்க்கண்ட எழுவினாக்கள் விசாரணைக்காக வனையப்பட்டுள்ளன.

1. தாவா புரோநோட்டு மதிப்பிடை மறுபயனுக்காக பெறப்பட்டதா ?

2. வாதிகள், வழக்குரையில் கோரியபடி தாவா தொகையும், பின்வட்டியும் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா?

3. வாதிகளுக்கு வேறு என்ன பரிகாரம் கிடைக்கத்தக்கது ?

**5.** வாதிகளின் தரப்பில் வா.சா.1 மற்றும் வா.சா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

6. **எழுவினாக்கள் எண்.1 முதல் 3–க்கான தீர்வு :**

வாதிகளின் குறிப்பான வழக்கு யாதெனில், கடந்த 15.02.2017 அன்று 1–ஆம் வாதியிடமிருந்து ரூ.20,00,000/–ஐ பிரதிவாதி கடனாக பெற்றுக் கொண்டு வா.சா.ஆ.1 புரோநோட்டை எழுதிக் கொடுத்ததாகவும், புரோநோட்டில் ஒப்புக்கொண்படி பிரதிவாதி தொகையை செலுத்தாத காரணத்தால், வா.சா.ஆ.2 படி அறிவிப்பு அனுப்பி, அதை பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.3 எனவும், வழக்கு நிலுவையிலிருக்கும்போது 1–ஆம் வாதி இறந்துவிட்டதால், 2 மற்றும் 3 வாதிகள் சேர்க்கப்பட்டுள்ளதாகவும், தாவா தொகையை பிரதிவாதி வாதிகளுக்கு செலுத்த வேண்டும் என்பது வாதிகளின் வழக்காகும். 1–ஆம் வாதியின் இறப்புச் சான்றிதழ் வா.சா.ஆ.4. வாரிசு சான்றிதழ் வா.சா.ஆ.6.

7. 2–ஆம் வாதி இந்த வழக்கில் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர்

மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. வா.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக வைக்கப்பட்ட நிலையில், பிரதிவாதி நீதிமன்றத்தில் அழைத்து ஆஜராகவில்லை. வா.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்யவில்லை. ஆகவே, பிரதிவாதி தோன்றாத் தரப்பினராகியுள்ளார். புரோநோட்டில் சாட்சி கையொப்பமிட்ட நபர் இந்த வழக்கில் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தன் சாட்சியத்தில், பிரதிவாதி தாவா புரோநோட்டை எழுதிக் கொடுத்த விவரத்தையும், அதில் தான் சாட்சி கையொப்பமிட்ட விவரத்தையும், வாதியிடம் பிரதிவாதி கடன் பெற்ற விவரத்தையும் தெரிவித்துள்ளார். வா.சா.1 மற்றும் வா.சா.2–ன் சாட்சியங்களுக்கு மாறுபட்ட விதத்தில் சாட்சியம் எதுவும் இல்லை. ஆகவே, பிரதிவாதி பிராது தொகையை பின்வட்டி மற்றும் செலவு தொகையுடன் 2 மற்றும் 3 வாதிகளுக்கு செலுத்த கடமைப்பட்டவர் என இந்த எழுவினாக்களுக்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவாக, பிராது தொகை ரூ.25,61,999/–ஐயும், அசல் தொகை ரூ.20,00,000/–க்கு பிராது தேதி முதல் தீர்ப்பு தேதி வரை 9% பின்வட்டியும், தீர்ப்பு தேதி முதல் தொகை வசூலாகும்வரை 6% பின்வட்டியும் வழக்கின் செலவு தொகையுடன் 2 மற்றும் 3 வாதிகளுக்கு, பிரதிவாதி செலுத்த உத்தரவிட்டு தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து பிழைத்திருத்தி இன்று 2022–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 08–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P SARAVANAN
Digitally signed by P SARAVANAN
Date: 2022.06.08 14:22:48 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
திண்டுக்கல்.

<u>வாதிகள் தரப்பு சாட்சிகள் :</u>

1. வா.சா.1 – சௌமியா
2. வா.சா.2 – சிதம்பரம்

**<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :</u>**

| | | |
|---|---|---|
| 1. வா.சா.ஆ.1 | – | 15.02.2017–ஆம் தேதி பிரதிவாதி, 1–ஆம் வாதிக்கு எழுதிக் கொடுத்த புரோநோட்டு. அசல். |
| 2. வா.சா.ஆ.2 | – | 14.06.2019–ஆம் தேதி வாதி தரப்பில் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு நகல், தபால் ரசீதுடன். |
| 3. வா.சா.ஆ.3 | – | பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை. அசல். |
| 4. வா.சா.ஆ.4 | – | 05.12.2019–ஆம் தேதிய தினகரனின் இறப்புச் சான்றிதழ். |
| 5. வா.சா.ஆ.5 | – | 13.01.2019–ஆம் தேதிய தினகரனின் மனைவி ருக்மணியின் இறப்புச் சான்றிதழ். நகல். |
| 6. வா.சா.ஆ.6 | – | தினகரனின் வாரிசு சான்றிதழ் நகல். |

P SARAVANAN
Digitally signed by P SARAVANAN
Date: 2022.06.08 14:22:58 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
திண்டுக்கல்.

Additional District Court,

Dindigul.

O.S. No. 121/2019

Judgment : FAIR

Dated : 08.06.2022